# இயல் : ஒன்று

## ஆய்வு முன்னுரை

### 1.1. தலைப்புத் தேர்வு

சமூகத்தில் சாதி, மதம் என்ற பிரிவினைகளாலும், ஏழை, பணக்காரர் என்ற ஏற்றத் தாழ்வுகளாலும், தீண்டாமைக் கொடுமைகளாலும், வறுமையாலும் மக்கள் பாதிப் படைகின்றனர். எனவே சமய, சமூக பொருளாதாரம் மற்றும் அரசியலில் மாற்றங்களை விரும்பிய இராமலிங்க அடிகளாரின் சமூகத் தத்துவங்களையும், தீண்டாமை அற்ற ஒரே உலகம் காண விரும்பி சாதிகளற்ற மத பேதங்களற்ற மனிதனுக்கு மனித தன்மை மட்டுமே தேவை என்ற கொள்கைகளைக் கூறிய ஸ்ரீ நாராயண குருவின் சமூகத் தத்துவங்களையும் ஒப்பீடு செய்து சமூக நன்மைகாகவும் மற்றும் இதுவரை எந்த ஆய்வும் இந்நோக்கில் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே மனித சமூகம் தம் வாழ்வில் பின்பற்றி ஒழுக வேண்டிய சமூக மேம்பாட்டுக் கருத்துகளாகிய இராமலிங்க அடிகளார் மற்றும் ஸ்ரீ நாராயண குருவின் சமூகத் தத்துவங்களை ஒப்பீட்டு அறியும் நோக்கிலே,

“இராமலிங்க அடிகளார் மற்றும் ஸ்ரீ நாராயண குருவின் சமூகத் தத்துவங்கள் – ஓர் ஒப்பாய்வு” எனும் இவ்வாய்வின் தலைப்பு தேர்வு செய்யப்பட்டுள்ளது.

## 1.2. ஆய்வு நோக்கம்

மானுட சமுதாயம் மேன்மையடைந்து சிறந்து விளங்கிட வேண்டி இராமலிங்க அடிகளார் தான் இயற்றிய படைப்புகளில் சாதி, சமய வேறுபாடு கூடாது, ஜீவகாருண்யம், ஆன்மநேய ஒருமைப்பாடு மற்றும் சமரச சுத்த சன்மார்க்க சமூகத் தத்துவங்களையும், ஸ்ரீ நாராயண குருவின் படைப்புகளில் ஒரு சாதி, ஒரு மதம் மற்றும் ஒரு கடவுள் கோட்பாட்டையும் ஆன்ம நேய ஒருமைப்பாட்டையும், பகுத்தாய்ந்து விளக்கி அதனை ஒப்பாய்வு செய்வதே ஆய்வின் நோக்கம் ஆகும்.

## 1.3. ஆய்வு எல்லை

இராமலிங்க அடிகளார் மற்றும் ஸ்ரீ நாராயண குருவின் படைப்புகளில் சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வுகளை நீக்கும் சமூக சீர்த்திருத்தக் கருத்துக்களை வரையறுத்துள்ளனர்.

இராமலிங்க அடிகளாரின் சமூகத் தத்துவங்கள்,

திருவருட்பா ஆறாந்திருமுறை
ஜீவகாருண்யம்
சமரச சுத்த சன்மார்க்கம்
ஆன்ம நேய ஒருமைப்பாடு
சாதி, சமய வேறுபாடு கூடாது
கடவுள் கோட்பாடு
போன்ற சமூக சீர்திருத்தக் கருத்துக்கள்

ஸ்ரீ நாராயண குருவின் சமூகத் தத்துவங்கள்,

ஒரு சாதி

ஒரு மதம்

ஒரு கடவுள்

ஆன்மநேய ஒருமைப்பாடு

போன்ற சமூக சீர்த்திருத்தக் கருத்துக்கள் என பன்முகப் பார்வையுடன் தனது சமூகத் தத்துவங்களை இராமலிங்க அடிகளார் மற்றும் ஸ்ரீ நாராயண குருவும் எடுத்து இயம்பியுள்ளனர். அவர்கள் எடுத்துரைக்கும் சமூகத் தத்துவங்களை விளக்கி ஒப்பாய்வு செய்வதே இவ்வாய்வின் எல்லையாக நிர்ணயிக்கபட்பட்டுள்ளது.

## 1.4. ஆய்வு மூலங்கள்

இராமலிங்க அடிகளாரின் படைப்புகளில் சமூகத் தத்துவங்களைக் கொண்ட

திருவருட்பா

உரைநடைப் பகுதிகள்

கடிதங்கள்

விண்ணப்பங்கள்

உபதேச குறிப்புகள்

போன்ற வடலூர் தெய்வ நிலைய வெளியீடு பதிப்புகளும்

ஸ்ரீ நாராயண குருவின் படைப்புகளில் சமூகத் தத்துவங்களைக் கொண்ட

ஆத்மோபதேச சதகம்

அத்வைத தீபிகா

அறிவு

தெய்வ தசகம்

தர்சண மாலா

பிரம்ம வித்தியா பஞ்சகம்

நிர்விருதி பஞ்சகம்

ஜீவகாருணிய பஞ்சகம்

அனுகம்பா தசகம்

ஜாதி நிர்ணயம்

ஜாதி லட்சணம்

தர்மம்

போன்ற ஸ்ரீ நாராயண குருவின் படைப்புகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பு செய்து நடராஜ குரு ( ஸ்ரீ நாராயண குருவின் முதன்மைச் சீடர் ) அவர்கள் வெளியிட்ட "Life and Teachings of Narayana Guru" என்ற நூலின் நாராயண குருகுலா பவுண்டேஸன், வர்கலா வெளியீடே முதன்மை ஆதாரங்களாக அமைந்துள்ளன.

இராமலிங்க அடிகளார் மற்றும் ஸ்ரீ நாராயண குரு குறித்து இதுவரை வெளிவந்துள்ள,

ஆய்வு நூல்கள்

ஆய்வு கட்டுரைகள்

தத்துவ நூல்கள்

சொற்கோவைகள்

சமூகத் தத்துவம் குறித்த கலைக் களஞ்சியங்கள் போன்றவைகளோடு,

சமூகத் தத்துவ கருத்துகளை கூறிய காரல் மார்க்ஸ், பெரியார், அம்பேத்கார், காந்தியடிகள், விவேகானந்தர் போன்றவர்களின் நூற்களும் இவ்வாய்வின் துணைமை ஆதாரங்களாக அமையப் பெறுகின்றன.

## 1.5. ஆய்வு நெறிமுறை

இவ்வாய்வு முழுவதும் இராமலிங்க அடிகளார் மற்றும் ஸ்ரீ நாராயண குருவின் படைப்புகளில் சமூகத் தத்துவங்களைப் பற்றித் திரட்டப்பட்ட தரவுகளை அடிப்படையாக கொண்டதால் ஆய்வு முழுவதும் விளக்கமுறை மற்றும் ஒப்பாய்வு முறை வடிவத்தில் ஆய்வின் அனைத்து இயல்களும் அமைக்கப்பட்டு உள்ளது .

## 1.6. இயல் பகுப்பு

“இராமலிங்க அடிகளார் மற்றும் ஸ்ரீ நாராயண குருவின் சமூகத் தத்துவங்கள் – ஓர் ஒப்பாய்வு” எனும் தலைப்பினைக் கொண்ட இவ்வாய்வு முன்னுரையும், முடிவுரையும் சேர்த்து ஆறு இயல்களைக் கொண்டு அமைகின்றது.

1. ஆய்வு முன்னுரை

2. இராமலிங்க அடிகளார் மற்றும் ஸ்ரீ நாராயண குருவின் வாழ்வியல்

3. இராமலிங்க அடிகளார் தத்துவங்கள்

   ஜீவகாருண்யம்

   சமரச சுத்த சன்மார்க்கம்

   ஆன்மநேய ஒருமைப்பாடு

4. ஸ்ரீ நாராயண குரு தத்துவங்கள்

   ஒரு சாதி

   ஒரு மதம்

   ஒரு கடவுள்

5. இராமலிங்க அடிகளார் மற்றும் ஸ்ரீ நாராயண குருவின் சமூகத் தத்துவங்கள்

6. முடிவுரை

துணைநூல் பட்டியல்

## 1.6.1. ஆய்வு முன்னுரை

ஆய்வு முன்னுரை எனும் இப்பகுதியில் தலைப்புத் தேர்வு இடம் பெறுகிறது, தொடர்ந்து இவ்வாய்வின் நோக்கம், ஆய்வு எல்லை, இயல் பகுப்பு போன்றவை விளக்கப் பெற்றுள்ளன.

## 1.6.2. இராமலிங்க அடிகளார் மற்றும் ஸ்ரீ நாராயண குருவின் வாழ்வியல்

19ம் நூற்றாண்டில் இந்திய சமூகத்தில் நிலவிய வறுமை, தீண்டாமைக் கொடுமை, அடிமை முறை போன்ற சமூக அவலங்களை விளக்கி, இராமலிங்க அடிகளார் மற்றும் ஸ்ரீ நாராயண குருவின் பிறப்பு, வாழ்வியல், அவர்களின் படைப்புக்கள், சீர்த்திருத்தங்கள் போன்றவைகளை விளக்குவதாக அமைகிறது . “இராமலிங்கஅடிகளார் மற்றும் ஸ்ரீ நாராயண குருவின் வாழ்வியல்” எனும் இவ்வியல்.

## 1.6.3. இராமலிங்க அடிகளார் தத்துவங்கள்

இராமலிங்க அடிகளாரின் தத்துவங்களில் மிக முக்கியமானதாகிய பசி நீக்கம், மனித தேகத்தின் மாண்புகள், பசியினால் வரும் கொடுமைகள், ஜீவகாருணியம், வறுமைச் சூழ்நிலைக்கு காரணங்கள், சமரச சுத்த சன்மார்க்கம், சமரச சுத்த சன்மார்க்கக்

கொள்கைகள், ஆன்மநேய ஒருமைப்பாட்டை விளக்கி இன்றைய தேவைக்கு புரிந்து கொள்வதாக அமைகிறது "இராமலிங்கஅடிகளார் தத்துவங்கள்" எனும் இவ்வியல்.

### 1.6.4. ஸ்ரீ நாராயண குரு தத்துவங்கள்

ஸ்ரீ நாராயண குருவின் தத்துவங்களாகிய ஒரு சாதி, ஒரு மதம், ஒரு கடவுள் மனிதனுக்கு போன்ற தீண்டாமைக் கொடுமைக்கு எதிரான தத்துவங்களையும், ஆன்மநேய ஒருமைப்பாடு, மதத்தின் உட்பொருள் மற்றும் இலட்சியம் தீண்டாமை ஒழிப்பு, அறக்கோட்பாட்டுத் தத்துவங்களையும் பகுத்தாய்வதாக அமைகிறது "ஸ்ரீ நாராயண குரு தத்துவங்கள்" எனும் இவ்வியல்.

### 1.6.5. இராமலிங்க அடிகளார் மற்றும் ஸ்ரீ நாராயண குருவின் சமூகத் தத்துவங்கள்

இராமலிங்க அடிகளார் மற்றும் ஸ்ரீ நாராயண குருவின் சமூகத் தத்துவங்களாகிய கருணைக் கோட்பாடு, சாதி, மதம், கடவுள், கோயில்கள், கல்வி, அறம் மூடநம்பிக்கை கூடாது, பெண்ணுரிமை, அறநெறிகள் மற்றும் நிறுவிய நிறுவனங்கள் போன்றவற்றை ஒப்பாய்வு செய்வதாக அமைகிறது "இராமலிங்க அடிகளார் மற்றும் ஸ்ரீ நாராயணகுருவின் சமூகத் தத்துவங்கள்" எனும் இவ்வியல்.

### 1.6.6. முடிவுரை

முடிவுரை எனும் இப்பகுதி ஆய்வின் அனைத்து இயல்களிலும் ஆராயப்பட்ட கருத்துக்களின் சாரமாக அமைக்கப் பெற்றுள்ளது.

# இயல் : இரண்டு

## இராமலிங்க அடிகளார் மற்றும் ஸ்ரீ நாராயண குருவின் வாழ்வியல்

### 2.1. இராமலிங்க அடிகளார் வாழ்வியல்

#### இராமலிங்க அடிகளார் பிறக்கும் போது தமிழகத்தின் சமூக நிலை

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பாதித் தொடக்கத்திலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பாதி முடிவு வரையுள்ள ஒரு நூற்றாண்டுக் காலத்தில் பாரதம் அந்நியர்களின் வேட்டைக் காடாக விளங்கியது. அந்நியர்களின் கருணையில்லா ஆட்சியாளும், தொழிலை அடிப்படையாகக் கொண்ட சாதியத்தாலும், சமய பூசல்களாலும், இயற்கையின் கொடிய பஞ்சத்தாலும் தமிழகம் உட்பட இந்தியா முழுவதும் வறுமையால் வாடியது, மக்கள் ஒருவேளை உணவுக்கு கூட வழியற்றவர்களாக விளங்கினர். மேலும் பிற சமயங்களின் படையெடுப்பால் அழிந்து கொண்டிருந்த பாரத கலாச்சாரத்தைக் காக்கவும், இந்து, முஸ்லீம், கிருஸ்தவ, மற்றும் சீக்கியம் போன்ற சமயங்களிடையே ஒருமைப்பாடுகாணவும், மதங்களிடையே நிலவிய மூட நம்பிக்கைகளை, சாதி வழிப்பட்ட உயர்வு, தாழ்மை மனப்பான்மைகளை போலி வைதிகர்களின் புரட்டுச் சடங்குகளை அடியோடு அழிக்கவும் புரட்சிகரமான சீர்திருத்தவாதிகள் தேவைப்பட்டனர்.

#### இராமலிங்க அடிகளாரின் பிறப்பு

தமிழ்நாட்டில் கடலூர் மாவட்டம் சிதம்பரம் வட்டத்தில் சிதம்பரத்திற்கு வடமேற்கே 20 கி.மீ தொலைவில் உள்ள மருதூரில்[1] இராமலிங்க அடிகளார் பிறந்தார். பெற்றோர் இராமையா பிள்ளை, சின்னம்மாள் என்போர் ஆவர்.[2]